**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 580 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 6** |
| **Name** | : | திரு. பன்னீர்செல்வம் |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **12.08.2022**

**முதல் விசாரணை :**

நான் அய்யர்பங்களா பக்கத்தில் உச்சபரம்புமேடு, ராஜாஜி தெருவில் குடியிருந்து வருகிறேன். மதுரை காமராஜர் பல்கலைகழகத்தில் அலுவலக உதவியாளராக வேலை செய்கிறேன். 26.09.2017 அன்று காலை சுமார் 10.00 மணியளவில் அசா1 கத்தியால் குத்தப்பட்டு இரத்த வெள்ளத்தில் மயங்கிய நிலையில் இருந்தார். நான் சத்தம் கேட்டு முதல் தளத்தில் இருந்து 2 வது மாடிக்கு சென்று பார்த்தேன். பின்னர் மாணவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அசா1 ஐ ஆம்புலன்சில் மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். போலிசார் அன்று மாலை சுமார் 05.15 மணிக்கு வந்து விசாரணை செய்தார்கள். இரத்தம் படிந்த இடத்தையும், இரத்தம் படாத இடத்தையும் என் முன்பாக தோண்டி எடுத்தார்கள். என் முன்பாக ஒரு டிராப்ட் மாதிரி வரைந்தார்கள். நான் அத்தாட்சியிலும், அந்த மற்றொரு ஆவணத்திலும் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சி மற்றும் பார்வை மகஜரில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகஜர் அதசாஆ. 2 ஆகும். 26.09.2017 ம் தேதியிட்ட வரைபடம்**

**அதசாஆ.3 ஆகும். 26.09.2017ம் தேதியிட்ட அத்தாட்சி அதசாஆ. 4 ஆகும்.** என்னிடம் காட்டப்படும் இரத்தக்கரை படிந்த டைல்ஸ் கல் ஒன்று அசாபொ. 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இரத்தக்கரை படியாத டைல்ஸ் கல் ஒன்று அசாபொ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் கத்தி ஏற்கனவே அசாபொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் அசாபொ1,2,3 பொருட்கள் அன்று சாயங்காலம் சுமார் 05.00, 05.15 மணிக்கு போலிசார் என் முன்பாக எடுத்தார்கள். போலிசார் என் முன்பாக ஒரு வரைபடம் தான் வரைந்தார்கள். என்னுடன் செந்தூர்பாண்டியன் என்பவர் அப்போது உடன் இருந்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் கு.வி.</u>**

போலிசார் என்னை முதன் முதலாக 26.09.2017 அன்று சாயங்காலம் சுமார் 05.15 மணிக்கு விசாரணை செய்தார்கள். என்னை போலிசார் விசாரணை செய்த போது, இந்த வழக்கில் காயம்பட்ட அசா1ன் சத்தம் கேட்டு நான் போனேன் என்றும், அங்கு அவர் மயக்க நிலையில் இருந்தார் என்றும், மாணவர்கள் காயம்பட்ட அசா1 ஐ ஆம்புலன்சில் மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள் என்று சொன்னேன். நான் கையொப்பம் செய்த ஆவணங்களை சம்பவ இடத்தில் வைத்து தான் தயார் செய்தார்கள். என்னை ஆய்வாளர் விசாரணை செய்தார். சம்பவ இடத்தில் என்னிடம் வரைபடம் வரைந்து என்னிடம் காண்பித்து கையொப்பம் வாங்கினார்கள். போலிசார் எங்கு வைத்து வரைபடம் தயார் செய்தார்கள் என்று தற்போது ஞாபகம் இல்லை. நான் மொழியியல் துறையில் அலுவலக உதவியாளராக வேலை பார்க்கிறேன். எங்கள் துறை முதல் மாடியில்உள்ளது. சம்பவம் 2வது மாடியில் நடந்தது. நான் நிறந்தரப்பணியாளர். எங்கள் துறைக்கு அசா1 தான் துறைதலைவார் ஆவார். இதழியல்துறைக்கு என்று தனியாக அலுவலக உதவியாளர் உள்ளாரா என்றால் ஒரு பெண் அலுவலக உதவியாளர் உள்ளார். அந்த அலுவலக உதவியாளர் அறை, அசா1ன் அறைக்கு பக்கத்தில் தான்

உள்ளது. அந்த அலுவலகத்தில் computer operator தனியாக உள்ளார்களா என்றால் அந்த ஸ்காலர்ஸ் அவர்களாகவே கம்ப்யுர்களை இயக்கிக்கொள்வார்கள். அந்த துறையில் இளநிலை உதவியாளர் இல்லை. இதழியல் துறையின் வாசலிலேயே டேன்டீ டீக்கடை உள்ளது. அங்கு எப்போதும் மாணவர்கள் மற்றும் வெளி ஆட்கள் டீகுடித்துக்கொண்டு இருப்பார்கள். எனது அலுவலக நேரம் காலை 10.00 முதல் மாலை 05.45 மணி ஆகும். நான் வேலைக்கு வரும்போது காலையில் அட்டன்டன்சில் கையெழுத்து போடுவேன். நான் அந்த அலுவலகத்தில் தான் பணிபுரிகிறேன் என்பதற்காக எங்கள் துறை அண்டன்டன்சை போலிசாரிடம் கொடுக்கவில்லை. மதுரை, காமராஜர் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் அனைவருக்கும் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டை உள்ளது. எனது அடையாள அட்டையை நான் போலிசாரிடம் விசாரணையின் போது கொடுக்கவில்லை. போலிசார் விசாரணைக்கு வந்த போது நான் எங்கள் துறையின் முதல் மாடியில் தான் இருந்தேன். அங்கு வைத்துதான் போலிசார் என்னை விசாரணை செய்து கையொப்பம் வாங்கினார்கள். போலிசார் விசாரணையின் போது, என் முன்பாக என்ன என்ன பொருட்களை கைப்பற்றினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. நான் அலுவலக உதவியாளர் என்பதால், எங்கள் மொழியில் துறை தவிர மற்ற துறைக்கு நான் சென்றது இல்லை. எனக்கு கல் என்றால் என்ன என்றும், டைல்ஸ் என்றால் என்ன என்றும், மண் என்றால் என்ன என்றும் வித்யாசம் தெரியும். என்னிடம் காட்டப்படும் அசாபொ.3 சிமெண்ட் துகள்கள் ஆகும். அசாபொ.2 டைல்ஸ் கிடையாது. சிமெண்ட் துகள்களையும், சிமெண்ட் தரையையும் எங்கு எடுத்தார்கள் என்றால் சம்பவ நடந்த இடத்தில் இருந்து எடுக்கப்பட்டது. என் முன்பாக டைல்ஸ் கல் எதுவும் எடுக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் அசாபொ.1 கத்தியை ஆய்வாளர் என்னிடம் காண்பித்தார். பொதுவாக அசாபெ.1 கத்தி சமையலுக்கு பயன்படுத்தும் கத்தி என்றால் சரிதான். நான் சொன்னது போல் மதுரை காமராஜர் பல்கலைகழகத்தில் பணிபுரியவில்லை என்றால் சரியல்ல. நான் அவ்வாறு வேலை பார்த்திருந்தால் எனது

வருகைப்பதிவேட்டையும், எனது அடையாள அட்டையும் போலிசார் விசாரணையின் போது காண்பித்து இருப்பேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து என்னிடம் அசாபொ.1,2,3 ஆகியவற்றை போலிசார் காண்பித்து அத்தாட்சி மற்றும் பார்வை மகஜரில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. என் முன்பாக சான்று பொருட்களை சம்பவ இடத்தில் கைபற்றப்படவில்லை என்றால் சரியல்ல. அசா1 எனக்கு வேண்டப்பட்டவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அசா1 எங்கு குடியிருக்கிறார் என்று எனக்குத் தெரியாது. சம்பவத்திற்கு பிறகு அசா1 ஐ நான் அன்று மாலையே வடமலையான் மருத்துவமனை சென்று பார்த்தேன். அந்த மருத்துவமனையில் வைத்து போலிசார் என்னை பார்க்கவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை